கொண்டுபோய் கூறு போடுவார்கள் என்று தைரியத்தை வரவழைத்துக்கொண்டு இருந்தேன்.

இந்த முகாமில் என்னைத் தவிர ரஞ்சித் என்னும் சகோதரன் இருந்தார், அவர் எனது இயக்கமான ஈ.என்.டி.எல்.எப். ஐ சேர்ந்தவர். அவருக்கு நீலநிற கால்சட்டை கொடுத்திருந்தனர். சறம் வழங்கப்படவில்லை. அவர் இறந்துவிட்டதாக அவரது சறத்தை உருவி அவரது வீட்டுக்கும் அனுப்பியிருந்தனர் விலங்குகள். ரஞ்சித் ஏற்கனவே அம்புரோஸ், சின்னக் கேடியால் வதைக்கப்பட்டு உடல் முழுவதும் தழும்புகளுடன் இருந்தார். குளிக்க வரும் போது அவரது உடலைப் பார்த்தேன். மனித உரிமைகள் பற்றிப் பேசும் அமைப்புகள் முன் அவரை நிறுத்தினால் புலி விலங்குகளது முகம் கிழிக்கப்பட்டு ஓநாய்களது முகம் தெரியவந்திருக்கும். இதனை அறிந்தேன்.

மூன்றாம் மாதத்தில் ஒரு நாள் அவரை காந்தியின் இறச்சிக் கடைக்கு அனுப்பிவிட்டனர். அவர் புறப்பட்டுச் செல்லும் போது எனது ஜன்னல் அருகில் வந்து என்னைக் கூப்பிடுகிறார்கள், பெரும்பாலும் கொன்றுவிடுவார்கள் என்றுதான் நினைக்கிறேன். இப்படி கால்விலங்குடன் இருப்பதை விட சாவது நல்லதுதானே என்று கூறிய அவர் நீங்கள் விடுதலையானால், எனது அண்ணன்களிடம் சொல்லுங்கள், என்னைக் கொண்டு போய் கொன்றுவிட்டார்கள் என்று! ரஞ்சித் முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டவில்லை, சாதாரணமாகக் கதைப்பது போன்று இதை என்னிடத்தில் கூறினார். ரஞ்சித்தின் அண்ணன்மார் யாழ் நகரில் கடை வைத்துள்ளனர். ஓர் நல்ல பண்புள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர் ரஞ்சித்.

நாங்கள் எதிரியிடம் சிக்குண்டு இவ்விதம் வதைபட்டால் எங்கள் இனத்துக்காக அதனைப் பெருமையுடன் தாங்கிக் கொள்வோம். ஆனால் இங்கே எங்கள் இனத்தவர்கள், கொடிய விலங்குகளாக மாறி எங்கள் இளைஞர்களை இப்படி அனியாயமாக சித்திரவதை செய்வதைப் பார்க்கும் போது எங்கள் இனத்தின் மீதே எங்களுக்கு வெறுப்பு ஏற்படுகிறது. இவர்கள் இப்படி மனிதநேயத்தை இழக்க யார் காரணமாக இருந்திருப்பார்கள்? இவர்களது பெற்றோரா? ஏத்தனை போராளிகளைக் கொல்வது? ஏத்தனை தலைவர்களைக் கொல்வது? எத்தனை அறிவு ஜீவிகளைக் கொல்வது? அனைத்துக்குமே கொலைதான் தீர்வு என்றால் சிங்கள இராணுவம் முல்லைத்தீவில் கொலை செய்ததை எப்படித் தப்பென்பது? தனக்கொரு நியாயம் பிறருக்கொரு நியாயமா?

தமிழகத்தில் புலி விளம்பர ஒலிபரப்பு வீரர் ஒருவர் சொன்னார், புலிகள் யாரையும் கொலை செய்யவில்லை! அவர்கள் தண்டனை தான் வழங்கினார்கள் என்று! ராஜபக்சே நாளை ஓர்


வெல்லப்போவது யார்.....? பாராளுமன்றத் தேர்தல் 2010

(சாகரன்)

*பாராளுமன்றத் தேர்தல் 2010*

தேர்தல் விஞ்ஞாபனம் - *பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி*

1990 முதல் 2009 வரை அட்டைகளின் (புலிகளின்) ஆட்சியில்......

*நடந்த வன்கொடுமைகள்!*
(கிறேசியன், நாவாந்துறை)

***சமரனின் ஒரு கைதியின் வரலாறு***

*“ஆயுதங்கள் மேல் காதல் கொண்ட மனநோயாளிகள்.”*
**வெகு விரைவில்...**

மீசை வைச்ச சிங்களவனும் ஆசை வைச்ச தமிழனும்

(சாகரன்)

*இலங்கையில்*

‘இராணுவ’ ஆட்சி வேண்டி நிற்கும் மேற்குலகம், துணை செய்யக் காத்திருக்கும் சரத் பொன்சேகா கூட்டம்

(சாகரன்)

*ஜனாதிபதி தேர்தல்*

எமது தெரிவு எவ்வாறு அமைய வேண்டும்?

-பத்மநாபா ஈபிஆர்எல்எவ்

*ஜனாதிபதித் தேர்தல்*

ஆணை இட்ட அதிபர் ‘கை’, வேட்டு வைத்த

